| | | | |
|---|---|---|---|
| Headline | **70 Percent Muslim** | | |
| Date | **10 Jun 2010** | Language | **Tamil** |
| MediaTitle | **Makkal Osai** | Page No | **3** |
| Section | **News** | Article Size | **120 $cm^2$** |
| Journalist | **N/A** | Color | **Full Color** |
| Frequency | **Daily** | ADValue | **517** |
| Circ / Read | **28,000 / 180,000** | PRValue | **1,551** |



### எச்ஐவி – எய்ட்ஸ் கொடூரம் பாதிக்கப்பட்டவர்களில்

# 70 % முஸ்லிம்கள்

## நாள் ஒன்றுக்கு 9 பேர் வரை பாதிப்பு

கோலாலம்பூர், ஜூன் 10-

நாட்டில் எச்ஐவி - எய்ட்சால் பாதிக்கப்பட்டுள்ள 87,710 பேரில் 70 விழுக்காட்டுக்கும் அதிகமானவர்கள் முஸ்லிம்கள் என்று மலேசிய எய்ட்ஸ் மன்றத்தின் உதவித் தலைவர் டத்தோ ஸமான் கான் கூறினார்.

எனவே, இந்த ஆண்டின் உலக எய்ட்ஸ் தினத்தின்போது அது தொடர்பான பிரச்சாரங்களும் அதன் பங்கேற்பு அம்சங்களும் முஸ்லிம்களை மையமிட்டு அமையும் என்று அவர் சொன்னார்.

மலேசியாவில் ஒவ்வொரு நாளும் குறைந்தது 9 மலேசியர்கள் இந்தக் கொடூரத்திற்கு இலக்காகிறார்கள் என்று ஐ.நா. சபையின் சிறப்புக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கை மிகவும் கவலை அளிக்கிறது என்று அவர் சொன்னார்.

அதிலும், பெண்களிடையே இது அதிகமாகப் பரவுகிறது. கடந்த 2000ஆம் ஆண்டில் 9.5 விழுக்காடாக இருந்த அவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 20 விழுக்காடு வரை உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்.

நேற்று முன்தினம் இரவு உலக எய்ட்ஸ் தின நினைவு நிகழ்ச்சி ஒன்றில் அவர் உரையாற்றினார்.

பெரும்பாலும் போதைப்பொருளுக்கு ஆட்படுவதே எச்ஐவி - எய்ட்ஸ் பரவுவதற்குக் காரணமாக இருக்கிறது. அதே போன்று பல நிலையில் பாலியல் உறவும் முக்கிய காரணமாக இருக்கிறது.

பெண்களை இந்தக் கொடூரத்தில் இருந்து காப்பாற்றுவதற்குப் போதுமான ஒத்துழைப்பு இல்லை என்று அவர் சொன்னார். - பெர்னாமா